அசல் வழக்கு எண். 13/2022
நாள் : 19.11.2024
வா.சா. : 1
பெயர் : நசுருல்லா

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்குரையில் சொல்லியுள்ள ஹாஜமைதீன் க்கு இரண்டு மனைவிகளா என்றால் ஆமாம். அவரை எனக்கு சிறுவயது முதல் தெரியும். ஹாஜமைதீன்க்கு முதல் மனைவி மூலம் பிறந்த குழந்தைகள் இந்த வழக்கின் 3, 4 பிரதிவாதிகள் என்றால் சரி. ஹாஜமைதீன் உடைய முதல் மனைவி பெயர் எனக்கு தெரியாது. அவர் எந்த ஊர் என்றால் வடகரை. அவர் 2020 ல் இறந்து விட்டார். ஹாஜாமைதீனும் அவர் முதல் மனைவியும் ஒற்றுமையாக இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ஹாஜாமைதீனின் இரண்டாம் மனைவி பெயர் சமீம்பானு என்றாலும் அவர் இந்த வழக்கின் இரண்டாம் வாதி என்றால் சரி. ஹாஜாமைதீனுக்கும் சமீம் பானுவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்று தெரியாது. அவர்கள் இருவருக்கும் குழந்தைகள் உள்ளதா என்றால் ஒரு ஆண் குழந்தை உள்ளது. அந்த ஆண் குழந்தைதான் இவ்வழக்கின் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரி. தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு தெரிந்த வரை ஹாஜாமைதீனுக்கு உண்டா என்றால் இல்லை. ஹாஜாமைதீனுக்கு என்ன வருமானம் எப்படி குடும்பத்தை நிர்வாகம் செய்தார் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரி. வழக்குரையின் பாரா 4ல் ஹாஜாமைதீனுக்கு சமீம் பானுவிற்கும் விவாகரத்து வரை போய்விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அதற்கு அர்த்தம் அவர்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டது என்பது தான் என்றாலும் அதை தான் வழக்குரை பாரா 4ல் சொல்லியுள்ளேன் என்றால் சரி. அவர்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டதா என்றால் கிளியனூர் ஜமாத் மூலம் விவாகரத்து ஆகிவிட்டது. தாவா சொத்து எந்த வருடம் யாரால் வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து அவர் மனைவி பெயரில் இருந்தது. அதை அவர் தனது கணவர் பெயரில் செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார். மனைவி யாரிடமிருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது. சொத்து வாங்கியது சம்பந்தமாக வழக்குரையில் ஏதாவது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஹாஜாமைதீனுக்கும் அவர் மனைவி சமீம் பானுவிற்கு என்ன பிரச்சனை என்றால் நான் மூன்றாம் நபர் என்பதால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. ஹாஜாமைதீனுக்கு அவர் மனைவி சமீம் பானுவிற்கு எதனால் பிரச்சனை ஏற்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னுடைய கட்சி படி ஹாஜாமைதீன் பணக்கஷ்டத்தில் இருந்தார் என்றாலும் அதனால் அவர் என் மாமா சம்சுதீனிடம் பணம் கேட்டு அவரிடம் பணம் இல்லை என்று தான் என்னை கொடுக்க சொன்னார். நான் பணம் கொடுத்து உதவினேன். அந்த பணத்திற்காக security ஆக கிரய உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் அப்படி இல்லை. பணம் தன்னால் திருப்பி கொடுக்கமுடியவில்லைர என்றும் அதனா்ல சொத்தை கிரயம் எழுதிக்கொடுத்து

விடுவதாக சொல்லி கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார். வாசாஆ 1 ஆவணத்தில் (28.08.2019) தாவா சொத்து பற்றியோ கிரயஉடன்படிக்கை பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரி. வாசாஆ 1 ஆவண காலகட்டத்தில் ஹாஜாமைதீனுக்கு சமீம் பானுவிற்கும் விவாகரத்து ஆகிவிட்டது என்றால் இல்லை அப்போது ஆகவில்லை. எப்போது விவாகரத்து ஆனது என்றால் அவர்களுக்கு விவாகரத்து எப்போது ஆனது என்று தெரியவில்லை. வாசாஆ 1, 2 ஆவணங்கள் கட்டப்பஞ்சாயத்து மூலம் வற்புறுத்தி பெறப்பட்டது என்றாலும் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணத்தில் கண்ட சங்கதிகள் ஏற்பட்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 12.10.2019 அன்று பஞ்சாயத்தில் ஒரு முடிவு செய்யப்பட்டதாக வாசாஆ 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அந்த பஞ்சாயத்து நடவடிக்கைகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்குரையில் பாரா 5ல் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் யார் சொல்லி நான் கொடுத்தது என்றால் என் தாய்மாமா சம்சுதீன் சொல்லி நான் ஹாஜாமைதீனுக்கு அந்த மூன்று தேதிகளில் பணம் கொடுத்தேன். நான் நேரடியாக பணத்தை யாரிடம் கொடுத்தேன் என்றால் சம்சுதீனிடம் கொடுத்து ஹாஜாமைதீனிடம் கொடுத்தேன். அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் ஹாஜாசுஜாவுதீன் இருந்தார். ஹாஜாமைதீனின் சகோதரி மகன் அபுதாஹிர் இருந்தார். அந்த மூன்று தொகையும் எந்த இடத்தில் வைத்து கொடுக்கப்பட்டது என்றால் என் தாய்மாமா சம்சுதீன் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். அந்த பணத்தை ஹாஜாமைதீன் என்ன செய்தார் என்றால் ஜமாத்தில் முடிவு செய்துள்ளது போல் தன் மனைவிக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். கிளியனூர் ஜமாத்தில் அந்த பணத்தை ஒப்படைத்தார். மேற்படி சங்கதி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஜமாத்தில் எத்தனை நாட்கள் அந்த பணத்தை வைத்திருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய கட்சி படி 18 லட்சம் ரூபாய் 1ம் பிரதிவாதிக்கு ஹாஜாமைதீன் கொடுக்கவேண்டும் என்றால் சரி. ஆனால் பாரா 5 படி 16,50,000/– தான் வருகிறது என்றால் சரி. ஹாஜாமைதீனுக்கு பணம் கொடுத்த விவரம் முதல் மனைவி மற்றும் 3, 4 பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. வழக்குரை பாரா 6ல் சொல்லியுள்ள தொகைகள் ஹாஜாமைதீனுக்கு கொடுக்கப்பட்டதா அல்லது சமீம் பானுவிடம் கொடுக்கப்பட்டதா என்றால் ஹாஜாமைதீனிடம் கொடுக்கப்பட்ட தொகைகள். என்னுடைய கணக்குப்படி மொத்தம் எவ்வளவு தொகை இதுநாள் வரை இந்த சொத்திற்காக கொடுத்துள்ளேன் என்றால் 19,60,000/– ரூபாய் ஹாஜாமைதீனிடம் கொடுத்தேன். வாசாஆ 4 ஆவணம் எனக்கும் ஹாஜாமைதீனுக்கு ஏற்பட்ட கிரய உடன்படிக்கை என்றால் சரி. கிரய உடன்படிக்கையில் ஹாஜாமைதீனிடம் கையெழுத்து எந்த இடத்தில் வைத்து போட்டார் என்றால் மயிலாடுதுறை நோட்டரி பப்ளிக் ஆபிஸில் வைத்து கையெ முத்து போட்டார். நோட்டரி பப்ளிக் ஆபிஸ் எங்குள்ளது என்று தெரியவில்லை. அந்த கிரய ஒப்பந்தம் எப்போது எழுதப்பட்டது என்றால் அந்த கிரய ஒப்பந்தத்தை ஹாஜாமைதீன் டைப் செய்து எடுத்து வந்தார். அந்த கிரய ஒப்பந்தத்தை படித்து பார்த்தேனா, அதிலுள்ள

விவரங்கள் சரியா என்றால் சரி. கிரய ஒப்பந்த தேதியில் எதாவது பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. 16,50,000/– போக மீதமுள்ள தொகைகள் ஹாஜாமைதீனின் சகோதரி மகன் அபுதாஹிர் மூலமாக ஹாஜாமைதீனின் மருத்துவ செலவுக்காகவும், செட்டில்மெண்ட பத்திர செலவிற்காகவும் ஹாஜாமைதீனிடம் கொடுக்கப்பட்டது. அதற்கு ரசீது எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. ஹாஜாமைதீன் அந்த காலகட்டத்தில் உடல் நலம், மனநலம் பாதிக்கப்பட்டு தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்தார்என்றால் நல்ல மனநிலையில் தான் இருந்தார். ordinary மருத்துவ செலவுகள் தான். அந்த கிரய உடன்படிக்கையில் காலக்கெடு 12 மாதங்கள் என்று போடப்பட்டதற்கு என்ன காரணம் என்றால் ஹாஜமைதீன் 12 மாத கால கட்டத்திற்குள் பணம் கிடைத்தால் திருப்பி கொடுத்து விடுவதாகவும் இல்லாவிட்டால் கிரயத்தை பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார். தாவா சொத்தின் அனுபவம் எனக்கு எப்போது வந்தது என்றால் கிரய உடன்படிக்கைக்கு பிறகு செட்டில்மெண்டிற்கு பிறகு தாவா சொத்தின் சாவியை என் மாமா சம்சுதீனிடம் ஒப்படைத்தார். அதனால் சொத்து வசத்தை என் தாய்மாமா மூலம் தான் பெற்றேன் என்றால் சரி. கிரய ஒப்பந்தத்திற்கு பிறகு எத்தனை காலம் கழித்து என் தாய்மாமனிடமிருந்து சொத்தின் வசத்தை பெற்றேன் என்றால் சுமார் மூன்று மாதம் கழித்து பெற்றேன். மேற்படி விவரத்தை நான் வழக்குரையிலோ வாசாஆ 4 ஆவணத்திலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாசாஆ 4 ஆவணத்தில் சொத்து என் வசத்தில் இருப்பதாகத்தான் சொல்லியுள்ளேன். வாசாஆ 3 ஆவணம் சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சொத்து வாங்குவதற்கு முன்பு அந்த சொத்து விற்பவருக்கு எப்படி கிடைத்தது என்றும் மூலப்பத்திரத்தையும் பார்க்கவேண்டுமென்றால் சரி. அதுபோல் பார்த்தேனா என்றால் இல்லை. பணம் உதவியாக கேட்டதால் கொடுத்தேன். மூலப்பத்திரத்தை பார்க்கவில்லை. வாசாஆ 3 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எப்போது செட்டில்மெண்ட் பத்திரத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சொத்தின் சாவியை ஒப்படைத்தபோது. வாசாஆ 3 ஆவணத்தில் தாவா சொத்து 31.07.2017 ல் எனது உடன்பிறந்த சகோதரி வஜ்ஹிபேகம் எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் படி கிடைத்த சொத்து என்று கண்டுள்ளது என்றால் சரி. அதை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த வஜ்ஹிபேகத்திற்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. கிரய உடன்படிக்கைக்கு பின் என்னென்ன பத்திரங்களை யார் மூலமாக நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சமீம் பானு ஹாஜமைதீனுக்கு கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம், ஹாஜமைதீன் பெயருக்கு மாற்றப்பட்ட EB card, ஹாஜமைதீன் பெயருக்கு மாற்றப்பட்ட பட்டா ஆகியவற்றை சம்சுதீன் மூலமாக பெற்றேன். அப்படி பெற்றது கிரய உடன்படிக்கை தேதியிலிருந்து சுமார் 3 மாதம் கழித்து என்றால் சரி. அனைத்து ஆவணங்களும் அரங்கக்குடி ஜமாத்தில் இருந்தது. நான் போட்டிருக்கும் கிரய உடன்படிக்கையில் கண்டுள்ள ஷரத்திற்கு விரோதமாக என்னுடைய சாட்சியம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சமீம் பானுவின் அக்கா வஜ்ஹிபேகம் என்று தெரிந்து கொண்டேனா என்றால்

கேள்விப்பட்டிருக்கிறேன். வஜ்ஹிபேகம் சமீம் பானுவிற்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் 31.07.2017 தேதியிட்ட செட்டில்மெண்ட பத்திரத்தை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு document எல்லாம் கொடுத்து உதவியது யார் என்றால் என் தாய்மாமா தான் கொடுத்தார். வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஹாஜாமைதீன் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம், பட்டா மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 7 ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் ஹாஜாமைதீன் வெளிநாட்டில் இருக்கும்போது சமீம்பானு விற்க முயற்சி செய்ததால் ஹாஜாமைதீன் ஜமாத்தில் கேட்டுக்கொண்டதால் ஜமாத் தலையிட்டு அந்த கிரய உடன்படிக்கை பத்திரத்தை ஜமாத் வாங்கி கொண்டது. வாசாஆ 7 உடன்படிக்கை உள்ளது என்ற விவரம் வாசாஆ 4 கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக் கொள்ளும்போது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அந்த கிரய உடன்படிக்கையை நான் அப்போது பார்க்கவில்லை. வாசாஆ 7 ஆவணத்தில் கண்ட கதீஜா பீவிக்கு நான் எதாவது நோட்டீஸ் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த கிரய ஒப்பந்த பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கதீஜா பீவியை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரி. வாசாஆ 4 உடன்படிக்கை வாசாஆ 7 உடன்படிக்கைக்கு மூன்று வருட காலகட்டத்துக்குள் போடப்பட்டது என்றால் தெரியவில்லை. வாசாஆ 7 உடன்படிக்கையை நான் அப்போது பார்க்கவில்லை கேள்விப்பட்டது தான். வாசாஆ 7 ஆவணம் மூலம் வாங்கப்பட்ட கிரய அட்வான்ஸ் திரும்ப பெறப்பட்டதா என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஹாஜாமைதீன் கொராணா காலகட்டத்தில் திருவண்ணாமலையில் இருந்தார் அதன்பிறகு ஊருக்கு வந்துவிட்டார். அவருக்கு கொரோணா வியாதி ஏற்படவில்லை. கொரோணா வியாதியை பற்றி வழக்குரையில் எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் ஹாஜாமைதீன் கொராணா காலகட்டத்தில் திருவண்ணாமலையில் இருந்தார் என்று சொல்லியுள்ளேன். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கொடுத்த பணத்தை எனக்கு திரும்பி கொடுத்தால் போதும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அது சம்பந்தமாகவோ அக்ரிமெண்ட் சம்பந்தமாகவோ வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. முதலில் சமீம் பானுதான் எனக்கு நில அபகரிப்பு செய்வதாகவும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்போவதாக நோட்டீஸ் கொடுத்தார். அந்த நோட்டீஸை நான் தாக்கல் செய்யவில்லை. கோர்ட்டுக்கு தெரியக்கூடாது என்று மறைத்து விட்டேன்எ ன்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் ஹாஜாமைதீன் இறப்பிற்கு பின் ஹாஜாமைதீனுக்கு கொடுத்த பணத்தை திரும்ப கொடுங்கள் அல்லது கிரய பத்திரம் எழுதிக்கொடுங்கள் என்று கிளியனூர் ஜமாத் மூலமாக கேட்டேன். அதற்கு அவர் நான் வழக்கு போட்டு பார்த்துக்கொள்கிறேன் என்றும் குறைந்த தொகைக்கு கிரய ஒப்பந்த பத்திரம் போட்டிருப்பதாக சொல்லிவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமான பிரச்சனை எனக்கும் பிரதிவாதிக்குமா அல்லது எனக்கும் ஜமாத்திற்குமா என்றால் ஹாஜாமைதீனால்

ஏற்பட்ட பிரச்சனை. 1ம் பிரதிவாதிதான் முதலில் நோட்டீஸ் அனுப்பினார். நான் எதுவும் செய்யவில்லையா என்றால் நான் கவியரசன் என்ற வக்கீல் மூலம் கேவியட் தாக்கல் செய்தேன் அந்த ஆவணத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இரண்டு முறை கேவியட் மனு தாக்கல் செய்தேன். தரங்கம்பாடி முன்சிப் கோர்ட், மயிலாடுதுறை சப் கோர்ட், ஆகிய நீதிமன்றத்தில் இரண்டு முறை கேவியட் தாக்கல் செய்தேன் என்றால் சரி. முதல் முறை கவியரசன் வழக்கறிஞர் மூலம் 21.04.2021 ல் போட்டேன் என்றால் சரி. அந்த கேவியட் மனுவின் served copy இது என்றால் சரி. அது **பிவாசா. 1** ஆகும். அதன் பிறகு 11.08.2021 ல் கவியரசன் வழக்கறிஞர் மூலம் போட்டேன் என்றால் சரி. அந்த கேவியட் மனுவின் served copy இது என்றால் சரி. அது **பிவாசா. 2** ஆகும். அந்த கேவியட் மனுவில் தாவா கிரய ஒப்பந்தம் பற்றி சொல்லவில்லை என்றால் சரி. அவர்கள் என்ன பண்ண வந்தார்கள் எதற்காக கேவியட் போட்டேன் என்ற விவரத்தை கேவியட் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் அந்த வீட்டில் வாடகைதாரர் ஒருவர் இருந்தார். அவரை காலி செய்து விட்டு அந்த வீட்டை ஆக்கிரமிக்கபோவதாக தெரியவந்ததால் கேவியட்போட்டேன்.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)